**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 131/2023**

**Deposition of P.W.** 8

Name : நிஷா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**06.08.2025**

A1. A2 Present. A3 absent petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் மாத்தாரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 2019ம் ஆண்டு ஒரு நாள் இண்டர்லாக் கற்களை சேதப்படுத்தியது தொடர்பாக பார்க்க சென்ற போது போலீசார் வந்திருந்தார்கள். சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள், பார்வை மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.2. நானும், சுஜாதாவும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இண்டர்லாக் கற்களை எப்போது சேதப்படுத்தினார்கள் என்று தேதி எனக்குத் தெரியாது. நான் எந்த தேதியில் பார்த்தேன் என்று

ஞாபகமில்லை.  2019ல் நான் இல்லத்தரசியாக வீட்டில் தான் இருந்தேன். நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை தான் போலீசாரிடமும் சொன்னேன். கற்களை யார் எடுத்து சென்றார்கள் என்று தெரியாது என்று சொன்னேன். போலீசார் எழுதி கொண்டு வந்ததில் நான் கையொப்பம் செய்தேன். தாமஸ் எனது உறவினர் என்றால் சரிதான்.  தாமஸ்–க்கு 2 வது எதிரியின் சொத்து வழியாக செல்வதற்கு வழிப்பாதை தேவையாக இருந்தது என்றால் சரிதான். தாமஸ் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.  எதிரிகளுக்கும், வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Name : சுஜாதா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**06.08.2025**

A1. A2 Present. A3 absent petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் மாத்தார், கசவன்பிலாவிளையில் வசித்து வருகிறேன். நான் வீட்டு வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். மாத்தார் அசோக், பியூலா வீட்டின் பக்கம் இண்டர்லாக் போட்டது பற்றி போலீசார் பார்த்து கொண்டிருந்தார்கள். அப்போது நானும், நிஷாவும் அதை பார்க்க போனோம். போலீசார் படம் வரைந்தார்கள். அப்போது தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

31.10.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு இடத்தை பார்க்க போனோம். போலீசார் தயார் செய்து கொண்டு வந்த பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தாமஸ் எனது உறவினர் என்றால் சரிதான். தாமஸ்–



க்கு சிம்லாள் சொத்து வழியாக பாதை தேவை என்றால் சரிதான். தாமஸ் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்திற்கு

வரவில்லை என்றால் சரியல்ல பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.